*கவனிக்க.- 2021.10.01 ஆந் திகதிய 2248 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2249 - 2021 ඔක්තෝබර් මස 08 වැනි සිකුරාදා - 2021.10.08

*2249 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1378 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1382 |


**கவனிக்க.**- (i) *ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1375-B 82275-5,403 (2021/ 10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. *விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*

II. *விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;*

III. *இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;*

IV. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*

V. *இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;*

VI. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;*

VII. *பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;*

VIII. *பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.*

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. *சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.*

2. *பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.*

3. *பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

4. *சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.*

5. *பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.*

6. *பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;*

7. *உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.*

8. *பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.*

9. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.*

10. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்கருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள்* (Electronic Communication Instruments/ Devices) *தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.*

11. *இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

12. *பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.*

13. *எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.*

14. *பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*

15. *பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.*

16. *பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.*

17. *பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:*

(i) *சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;*

(ii) *பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;*

(III) *பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.*

(a) *ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.*

(b) *சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.*

(iv) *பரீட்சார்த்தி புளூடூத்* (Bluetooth) *போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை* (Electronic Communication Devices) *உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;*

(v) *பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;*

(vi) *பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;*

(vii) *நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;*

(vIII) *விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;*

(ix) *கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;*

(x) *கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;*

(xi) *ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;*

(xii) *உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;*

(xIII) *ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பல்கலைக்கழக வைத்தியசாலை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

### வெற்றிடங்கள்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனையில் பின்வரும் பதவிகளுக்கு (நிரந்தர அடிப்படை) தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*1.* ***வைத்திய அதிகாரி - தரம்* I**

*தகைமைகள் :*

I. *வைத்திய அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவை உடைய மருத்துவ அதிகாரி ;*

*அத்துடன்*

II. *சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் “தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மற்றும் மகப்பேற்று இல்லங்கள்” என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது ஆறு (06) வருட கால அனுபவம் ;*

*அத்துடன்*

III. *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்புத் தகைமை ;*

*அத்துடன்*

IV. *இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்.*

*சம்பள அளவுத்திட்டம்:*

MO *1-1 ரூபா (58,675.00 - 3 × 1,375 - 7 × 1,385 - 2 × 1,910 - 10 × 2,270 - ரூபா 99,015.00)*
* *தரம்* I *வைத்திய நிபுணர்கள்* MO 1-1 *ரூபா 78,585.00 இன் 14 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.*

*2.* ***வைத்திய அதிகாரி - தரம்* II**

*தகைமைகள்:*

I. *மருத்துவ அதிகாரியாக செயற்படுவதன் பொருட்டு இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரியாக இருத்தல் ;*

*அத்துடன்*

II. *சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் “தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மற்றும் மகப்பேற்று இல்லங்கள்” என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ அதிகாரியாக குறைந்தது இரு (02) வருடகால அனுபவம் ;*

*அத்துடன்*

III. *இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்.*

*சம்பள அளவுத்திட்டம்:*

MO 1-1 *ரூபா (58,675.00 - 3 × 1,375 - 7 x 1,385 – 2 × 1,910 – 10 × 2,270 - ரூபா 99,015.00)*
* *தரம்* II *வைத்திய அதிகாரிகள்* MO 1-1 *ரூபா 64,185.00 இன் 5 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.*

**3. வைத்திய அதிகாரி - ஆரம்பத் தரம்**

தகைமைகள்:

I. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரி ;

அத்துடன்

II. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்.

சம்பள அளவுத்திட்டம்:

MO 1-1 ரூபா (58,675.00 - 3 × 1,375 - 7 × 1,385 – 2 × 1,910 – 10 × 2,270 - ரூபா 99,015.00)

* ஆரம்பத்தர வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 60,050.00 இன் 2 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர்.

**4. இதய-நுரையீரல் இயந்திர இயக்குநர் (Perfusicenist)**

தகைமைகள்:

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பௌதிகவியல் தொடர்பான பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

வயதெல்லை:

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:

MA 4 – ரூபா (37,970.00 – 10 × 755 - 15 × 930 – 5 × 1,135 – ரூபா 65,145.00)

* இதய-நுரையீரல் இயந்திர இயக்குநர் (Perfusicenist) MA – 4 இன் முதலாம் நிலைக்குள் உட்படுத்தப்படுவார்.

**5. எழும்பியல் பட்டறை மெக்கானிக் (Orthopedic workshop mechanic)**

தகைமைகள்:

I. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்கல்வி தகுதிச் சான்றிதழ், மின்னணு மற்றும் மின்னியலில் குறைந்தது டிப்ளோமா (NVQ 5) இனைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

II. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் மின்னணு மற்றும் மின்னியலில் உயர் தேசிய டிப்ளோமா (NVQ 5) இற்கு குறையாத சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

III. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார்ந்த, (NVQ 5) இற்கு குறையாத தேசிய தொழிற்தகுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

வயதெல்லை :

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:

MA 2 – ரூபா (30,310.00 – 10 × 300 - 7 × 350 – 4 × 495 – 20 × 660 - ரூபா 50,940.00)

* எழும்பியல் பட்டறை மெக்கானிக் MA – 2 இன் முதலாம் நிலைக்குள் உட்படுத்தப்படுவார்.

**6. ஒலியியல் வல்லுநர் (Audiologist Technician)**

தகைமைகள்:

I. தேசிய தொழிற்கல்வி தகுதிச் சான்றிதழின் NVQ 5 இற்கு குறையாமல் சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் இரண்டு வருட முழுநேர வழக்கமான மற்றும் உள்வாரி ஓடியோலொஜிஸ்ட் (ஒலியியலாளர்) டிப்ளோமா பயிற்சி வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

II. இலங்கை மருத்துவ சபையில் ஓடியோலொஜிஸ்ட் (ஒலியியலாளர்) ஆக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை :

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:

MA 2 – (ரூபா 30,310.00 – 10 × 300 - 7 × 350 – 4 × 495 – 20 × 660 - ரூபா 50,940.00)
* ஒலியியல் வல்லுநர் MA – 2 இன் முதலாம் நிலைக்குள் உட்படுத்தப்படுவார்.

**பொது நிபந்தனைகள்:**

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்குரிய கடமைகளை சிறப்பாக செய்வதற்கு போதுமான உடல் மற்றும் மனத்தகுதியுடன் இருத்தல் வேண்டும். மேலும், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனையிலோ அல்லது பல்கலைக்கழகத்தின் வேறு எந்த இடத்திலோ சேவை செய்ய இயலுமாக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த தார்மீக பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் முடிவடையும் இறுதித்திகதிக்கு முன் தேவையான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
5. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஆரம்ப தர மருத்துவ துறை மற்றும் மற்றைய உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், ஏனைய விசேட தரப்பதவிகள் மற்றும் அரசாங்க சேவையிலுள்ள மருத்துவ நிபுணர் II மருத்துவ அதிகாரி தரம் I ஆகியோர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.
6. ஊழியரின் பங்களிப்பானது ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கு (EPF) 10% உம் பல்கலைக்கழகத்திற்கு (EPF) 15% உம் ஊழியர் அறக்கட்டளை நிதியத்திற்கு (ETF) 3% முமாக அமையும்.(பாராளுமன்றத்தால் அறிமுகப்படுத்தப்படும் திருத்தச் சட்டங்களுக்கு உட்பட்டது.)
7. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் உரிய சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளுடனும் 25.10.2021 க்கு முன் "நிறைவேற்று அதிகார பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனை, வேரஹெர" எனும் முகவரிக்கு அல்லது edassistant_uh@kdu.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விண்ணப்பதாரர்களை பட்டியலிடும் உரிமையை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனை கொண்டுள்ளது.
9. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத அல்லது தாமதமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பிற்கு இணங்காத விண்ணப்பங்கள் என்பன நிராகரிக்கப்படும்.
10. விண்ணப்பங்கள் மற்றும் பிற விபரங்களை KDU இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்.(www.kdu.ac.lk).

**ஜெனரல் கமல் குணரத்ன** (ஓய்வுபெற்ற),
டபிள்யுடபிள்யுவி ஆர்டபிள்யுபி ஆர்எஸ்பி யூஎஸ்பி என்டிசி பிஎஸ்சி, எம்பில்
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

10-339

---

**இலங்கை வான்படை**

2021, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 2245 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலை திருத்தம் செய்தல்

1. **தொழிற்துறை தகைமை/கல்வித்தகைமை**

அ. **மின்னணு பொறியியல் பிரிவு:-**

(1) ஆராய்ச்சி அதிகாரி ஆண் /பெண் (தொண்டர்)

**குருப் கப்டன்/விங் கமாண்டர் - தலைமை ஒருங்கிணைப்பாளர் (திட்டம்)**

பேராசிரியர் /கலாநிதி பட்ட தகுதி வாய்ந்த நிபுணர்கள் : பொறியியல் இயற்பியல்/பொருள் பொறியியல்/பாலிமர் மின்னணுவியல்/நனோ தொழில்நுட்பம்/ ரோபாட்டிக்ஸ் மற்றும் மெகாட்ராணிக்ஸ் பொறியியல் ஆகிய ஏதாவது

ஒரு துறையுடன் பொறியியல் ஒழுக்கத்தில் பட்டம் (PhD) முடித்து குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**ஸ்குவாட்ரன் லீடர் - திட்ட ஆய்வாளர்**

முதுநிலை நிலை தகுதி வாய்ந்த வல்லுநர்கள் : பொறியியல் துறையில் முதுநிலை முடித்த எலக்ட்ரிகல், மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் ஆகிய ஏதாவது ஒரு துறையுடன் பொறியியல் துறையில் முதுநிலை பட்டம் முடித்து குறைந்த பட்சம் 05 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2. **அடிப்படை தகைமைகள்:**

வயது : 2021, நவெம்பர் 01 ஆந் திகதியன்று;
ஸ்குவாட்ரன் லீடர்-40 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்;
குரூப் கப்டன்/விங்க் கமாண்டர் - 50 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

3. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :-**

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2021, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் " பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, பிரதான ஆட்சேர்ப்பு அலுவலகம், தொழிற்துறை பாடசாலை, இலங்கை வான்படை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம் மின்னணு பொறியியல் பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவு திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

4. **சம்பளமும் கொடுப்பனவு:-**

அ. இலங்கை வான் படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு:-

| வருடம் / நிலை | 2021 (வருடத்திற்கு) |
|---|---|
| ஸ்குவாட்ரன் லீடர் | 731,580.00 - (22×16020) = 1,084,020.00 |
| விங்க் கமாண்டர் | 751,140.00 - (17×19560) = 1,083,660.00 |
| குரூப் கப்டன் | 914.100.00 - (17×26040) = 1,356,780.00 |

எஸ். கே. பதிரன,
WWV and Bar, RWP and Bar, RSP and three Bars,
VSV, USP, MSc (MOA) USA, MSc (Def Stu) in Mgt,
M Phil (Ind), MIM (SL),
ndc (Ind), psc, qfi
எயர் மார்ஷல்,
வான் படை தளபதி.

தலைமையலுவலகம்,
இலங்கை வான்படை,
த.பெ. இல. 594,
கொழும்பு 02.

10-327

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – காலி மாவட்டம்

**விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல் - இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2241 ஆம் இலக்கமுடைய 2021.08.13 ஆந் திகதிய வர்த்தமானியில் பகுதி I : தொகுதி II (அ) இல் என்னால் பிரசுரிக்கப்பட்ட காலி மாவட்டத்தில் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவில் மாத்திரம் விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்கின்றேன்.

டபிள்யூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, செத்தெம்பர் 24.

அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| காலி | போபே போத்தல | கராபிட்டிய மகப்பேற்று மருத்துவமனை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி |

10-84

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கரும்பு, சோளம், கஜு, மிளகு, கருவா, கிராம்பு, வெற்றிலை உட்பட சிறு தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**
**ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தில் பண்ணை முகாமையாளர், விரிவாக்கல் உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பின்வரும் பதவிகளில் 2021.04.02 ஆம் திகதி அன்று நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதன் பொருட்டு இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பண்ணை முகாமையாளர் | 11 |
| 02 | விரிவாக்கல் உத்தியோகத்தர் | 38 |
| 03 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 08 |

02. விண்ணப்பகாரரது வயது 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

03. இப்பதவியின் பொருட்டு MN-3 2016 இற்கு அமைய ரூபா 31,040.00-10×445-11×660-10×730-10×750- ரூபா 57,550.00 மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். அரசாங்க பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இற்கு அமைய வேதனம் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

04. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு, தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

05. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பகாரர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சகல அடிப்படைக் கல்வித் தகைமைகளையும் மற்றும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருப்பது கட்டாயமாகும்.

**கல்வித் தகைமைகள்** .- சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

உயிரியல் விஞ்ஞானம், விவசாயம், இரசாயணவியல், பௌதீகவியல், விவசாய தொழில்நுட்பவியல் உயிரியல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியல் பொருட்டான விஞ்ஞானப் பாடங்கள் (02) இரண்டுடன் பாடங்கள் (03) மூன்றில் க.பொ.த.(உ/த)ப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள் .-**

விவசாயத் துறைக்கு உரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஒரு டிப்ளோமா சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.

i. தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற இரண்டு வருட விவசாய டிப்ளோமா.

ii. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற விவசாயத் துறைக்குரிய உயர் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா.

iii. அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற விவசாயத் துறைக்குரிய தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா.

iv. தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வழங்கும் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற விவசாயத் துறைக்கு உரிய டிப்ளோமா.

v. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற விவசாயத் துறைக்கு உரிய டிப்ளோமா

vi. விவசாயத் துறைக்கு உரியவாறு தேசிய தொழிற் திறன் (NVQ) 6 மட்டத்தில் தகைமையை பூரணப்படுத்தி இருத்தல்.

vii. விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற இரண்டு வருட விவசாய டிப்ளோமா.

viii. உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவை ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

06. **விண்ணப்பிக்கும் முறை**

அ. இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய A4 (21cm x 29cm) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இலக்கம் 1 முதல் 7 வரையான பந்திகள் முதலாம்

பக்கத்திலும் ஏனைய பந்திகள் முறையாக அடுத்தடுத்த பக்கங்களிலும் உட்படுத்தி விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன் அதற்கு உரிய தகவல்களை தமது கையெழுத்தினாலே மிகத்தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை தாம் பரீட்சைக்கு அமரும் மொழி மூலத்திலேயே நிரப்பப்படுதல் வேண்டும்.

ஆ. ஒரு விண்ணப்பகாரருக்கு ஒரு பதவிக்கு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். அத்துடன் அதன் நிமித்தம் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டியதில்லை. அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பங்களில் தெளிவாக பதவியின் பொருட்டு விண்ணப்பம் செய்யும் பதவிகளின் முன்னுரிமையை கீழே தரப்பட்டுள்ள தொடர் இலக்கத்துடன் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் செய்யப்பட்ட பதவிகளின் விருப்பத் தெரிவு வரிசையினை பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

| பதவி இலக்கம் | பதவிப் பெயர் | தொடர் இலக்கம் |
|---|---|---|
| 01 | பண்ணை முகாமையாளர் | 001 |
| 02 | விரிவாக்கல் உத்தியோகத்தர் | 002 |
| 03 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 003 |

- உதாரணம்

1 ஆவது விருப்பத் தெரிவாக விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவியும், 2 ஆவது விருப்பத் தெரிவாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியும், 3 ஆவது விருப்பத் தெரிவாக பண்ணை முகாமை பதவிக்கும் விண்ணப்பம் செய்வதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பக்காரர் ஒருவர் அந்தப் பதவிகளுக்கு உரியவாறான தொடர் இலக்கத்தை விண்ணப்பப் படிவத்தில் 2 ஆவது அட்டவணையில் தொடர் இலக்கத்தை குறிக்கும் நிரலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு காட்டப்படுதல் வேண்டும்.

| பதவி இலக்கம் | விருப்பத் தெரிவு முன்னுரிமை | பதவிப் பெயர் | தொடர் இலக்கம் |
|---|---|---|---|
| 01 | 1 ஆவது விருப்பத் தெரிவு | விரிவாக்கல் உத்தியோகத்தர் | 002 |
| 02 | 2 ஆவது விருப்பத் தெரிவு | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 003 |
| 03 | 3 ஆவது விருப்பத் தெரிவு | பண்ணை முகாமையாளர் | 001 |

இ. விண்ணப்பத்தை தயார் செய்கையில் அங்கு தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கும் மேலாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கும் மேலாக ஆங்கிலத்திலும் அமைந்திருத்தல் வேண்டும்.

ஈ. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2021.11.08 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ “பணிப்பாளர் நாயகம், ஏற்றுமதி விவசாய திணைக்களம், 1095, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கெட்டம்பே, பேராதனை” எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாக எழுதுதல் வேண்டும்.

உ. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பம் செய்கின்ற பதவிகளின் எண்ணிக்கைக்கு அமைய உரியவாறான பரீட்சை கட்டணத்திற்கு உரியதான காசுக்கட்டளையை ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு பேராதனை தபால் பணிமனையில் மாற்றத்தக்கவாறு நாடாளாவிய ரீதியில் அமையப் பெற்றுள்ள எந்த ஒரு தபால் பணிமனையிலும்/உப தபால் பணிமனையிலும் பெற்றுக் கொண்டு அந்த காசுக்கட்டளையை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கவும். அதன் ஒளிப்படப் பிரதியை (Photocopy) தம் வசம் வைத்திருப்பதானது பெரிதும் பிரயோசனமாக அமையும். இந்த பரீட்சைக் கட்டணங்களுக்கும் மேலாக எவ்வித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகின்றேன். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளை அல்லது முத்திரை என்பன

ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது அத்துடன் பரீட்சையின் பொருட்டு செலுத்திய கட்டணம் எவ்விதக் காரணத்திலும் மீள செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறு ஒரு பரீட்சையின் நிமித்தம் அதனை மாற்றம் செய்யவும் முடியாது.

| விண்ணப்பம் செய்யும் பதவிகளின் எண்ணிக்கை | பரீட்சைக் கட்டணம் |
|---|---|
| பண்ணை முகாமையாளர் மற்றும் / அல்லது விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு | ரூபா 750.00 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு | ரூபா 750.00 |
| பண்ணை முகாமையாளர் மற்றும் /அல்லது விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவி மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு | ரூபா 1000.00 |

ஊ. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்படாத மற்றும் தாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். அத்துடன் தபாலிடுகையின் போது காணாமல் போதல், தாமதமாதல் போன்றன தொடர்பில் ஏற்றுமதி விவசாய திணைக்களம் பொறுப்புச் சொல்ல மாட்டாது. ஆகவே, விண்ணப்பப் படிவத்தை அனுப்பி வைப்பதற்கு முன்னர் விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய உள்ளதா எனவும் மற்றும் சகல தகவல்களையும் உட்படுத்தி விண்ணப்பப் படிவம் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அவ்விடயங்கள் விண்ணப்பத்தில் உட்படுத்தப்பட்டு பற்றுச் சீட்டை கழறாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் மீள கவனத்திற் கொள்ளுமாறு அறியத் தருகின்றேன். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் ஒளிபடப் பிரதியையும் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் ஒளிபடப் பிரதியையும் தம் வசம் வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

எ. விண்ணப்பப் படிவத்திலும், பரீட்சையின் பொருட்டான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பத்தாரரது கையொப்பத்தை சான்றுபடுத்தி இருத்தல் வேண்டும். ஏதாவது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரியின் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரியினாலும் அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், கிராம அலுவலர், சமாதான நீதவான், சட்டத்தரணி, நொத்தாரிஸ், முப்படை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள பதவிநிலை தரத்தில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரரது கையொப்பம் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

ஏ. தற்போது அரசாங்க சேவையில் உள்ளோர் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக தமது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

**பிழையான தகவல்கள் பொருட்டான தண்டனை .-** விண்ணப்பப் படிவத்தை நிரப்புகையில் மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய விண்ணப்பதாரர் எவரேனும் ஒருவர் தகைமையற்றவர் என தெரிய வந்தால் அவர் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதாவது சந்தர்ப்பத்தில் அவரது பரீட்சாரத்தத் தன்மை நிராகரிக்கப்படும்.

07. **பரீட்சை முறை .-**

அ. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பம் செய்துள்ளனர் எனும் எடுகோளின் கீழ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் உள்ள விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்கு உரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பதாரருக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சையின் பொருட்டு அமருகின்ற முதலாவது நாளிலேயே தமக்கு உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் பரீட்சையில் அமருவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

ஆ. இந்தப் பரீட்சை 2021, திசெம்பர் மாதம் கொழும்பில் மாத்திரம் நடைபெறும். பரீட்சைத் தினத்திற்கு 05 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்காத விண்ணப்பதாரர் கீழே தரப்பட்டுள்ள விபரங்களை சமர்ப்பித்து தாமதியாது கொழும்பு 07, மலலசேகர மாவத்தை, இலக்கம் 28/10, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் விசாரிக்க முடியும்._

விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு குறுஞ் செய்தி ஒன்று இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் வெளியிடப்படும். குறுஞ் செய்தி கிடைக்கப் பெற்று 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு அறியக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பதாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு விசாரனை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரரினால் தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பம் பதிவுத் தபாலிலிட்ட பற்றுச் சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும். கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் தொலைநகலின் ஊடாக அனுமதிப் பத்திரத்தின் பிரதியை பெற்றுக் கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களை உட்படுத்திய வேண்டுகோள் கடிதத்தையும் தொலைநகலின் ஊடாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு அனுப்பி வைத்து விசாரிப்பது சிறந்ததாகும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை தம்வசம் வைத்திருப்பது மிகவும் பிரயோசனமாக அமையும்.

i. பரீட்சையின் பெயர்
ii. விண்ணப்பதாரரது முழுப் பெயர்
iii. முகவரி
iv. விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட திகதி, பதிவு செய்யப்பட்ட தபால் பணிமனை மற்றும் இலக்கம்
v. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் இலக்கம், திகதி மற்றும் தபால் பணிமனை.

இ. பரீட்சைக்கு அமருவதற்காக விண்ணப்பதாரரால் மேற்கொள்ளப்படுகின்ற போக்குவரத்துச் செலவோ அல்லது வேறு எந்த ஒரு கொடுப்பனவோ வழங்கப்பட மாட்டாது.

ஈ. **ஆளடையாளம்.-** பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தோற்றும் சகல பாடவேளைகளிலும் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு

i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது
ii. ஏற்றுக் கொள்ளக்கூடிய கடவுச்சீட்டினை சமர்ப்பித்தல் வேண்டும்.

தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

உ. **பாடத்திட்டம்.-**

பண்ணை முகாமையாளர் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவி ஆகிய இரண்டின் பொருட்டும் நடாத்தப்படுவது ஒரு எழுத்துப் பரீட்சையாகும்.

| பாட இலக்கம் | பாடங்கள் | நேரம் (மணி) | உச்சப் புள்ளி | சித்தியெய்தும் புள்ளி | உரியவாறான பதவி |
|---|---|---|---|---|---|
| 01 | விவேகப் பரீட்சை | 01 | 100 | 40% | சகல பதவிகளுக்கும் |
| 02 | பொதுப் பரீட்சை I (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பொதுப் பரீட்சை) | 03 | 100 | 40% | பண்ணை முகாமையாளர் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு |
| 03 | பொதுப் பரீட்சை II (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பொதுப் பரீட்சை) | 03 | 100 | 40% | தொழில்நுட்ப பதவியின் பொருட்டு |

i. **விவேகப் பரீட்சை :** (சகல பதவிகளின் பொருட்டும் உரித்தாகும்)
இதில் விண்ணப்பதாரர் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடை எழுதுதல் என்பவற்றைக் கொண்ட 50 வினாக்கள் வழங்கப்படுவதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

ii. **பொது பரீட்சை I (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பொதுப் பரீட்சை) : (பண்ணை முகாமையாளர் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளின் பொருட்டு உரித்தாகும்)**

- பொதுவான விவசாயம் மற்றும் தத்துவங்கள்.
- பயிர் உற்பத்தி மற்றும் தத்துவங்கள் விவசாய செயன்முறையின் விஞ்ஞானபூர்வ விடயங்கள்.
- மண் மற்றும் உரம், தாவர போசணை, சூழல் தாக்கம்.
- தாவர இனப்பெருக்க முறை.
- நோய் மற்றும் கிருமிநாசினிகளது இயல்பு மற்றும் தாக்கம்.
- விவசாயக் கொள்கை, இறந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால பிரமாணங்கள்.
- ஏற்றுமதி விவசாய பயிர், மிளகு, கருவப்பட்டை, கோப்பி, கொக்கோ, ஏலம், கிராம்பு, சாதிக்காய், வெற்றிலை, பாக்கு, வெனிலா மற்றும் ஏனைய பயிர்களுக்கு உரிய தாவரவியல் விஞ்ஞான விடயங்கள் காலநிலை காரணிகள், உரத் தாக்கம் மற்றும் போசணை, நோய் மற்றும் கிருமிநாசினி கட்டுப்பாடு, அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம்.
- ஏற்றுமதி பயிர் உற்பத்தி சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி பிரமாணங்கள்.
- சேதன விவசாயம்.
- பண்ணை நிர்வாகம், செடி மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் செடி வளர்ப்பு மற்றும் சேதன பயிர்ச் செய்கை
- விவசாய விரிவாக்கல் முறை மற்றும் விரிவாக்கல் அமைப்பு.

iii. **பொதுப் பரீட்சை II (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பொதுப் பரீட்சை) : (தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு உரித்தாகும்)**

- விவசாய தத்துவம்
  - இலங்கையில் காலநிலை வலயம் மற்றும் பயிர் உற்பத்தி தொடர்பில் அவற்றின் தாக்கம்.
  - மண் வகை, மண்ணரிப்பு பாதுகாப்பு, தாவரப் போசணை மற்றும் நீர் பாதுகாப்பு.
  - பீடைகளை இனங்காணல், வகைப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்
  - தாவர இனப்பெருக்கம், நாற்றுமேடை பராமரிப்பு, மற்றும் இழைய வளர்ப்பு
  - விவசாயம் மற்றும் சூழல்.
  - தோட்டச் செய்கை, களப் பயிர்ச் செய்கை, கலப்புப் பயிர்ச் செய்கை மற்றும் விவசாய பயிர்ச் செய்கை
  - அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம்.
  - ஏற்றுமதி விவசாய பயிர் பொருள் உணர்த்தல், இனப்பெருக்கம், கள ஸ்தாபகம், பராமரிப்பு, நோய் பீடை கட்டுப்பாடு மற்றும் அறுவடை செய்தல்.
  - பண்ணை பராமரிப்பு மற்றும் திட்டமிடல் செய்தல்.

- இலங்கையில் விவசாயத் துறை அபிவிருத்தி மற்றும் அது தொடர்பாக அரசாங்க மற்றும் தனியார் துறையினது பங்களிப்பு
- ஆய்வுகூட உபகரணங்களை அறிந்து கொள்ளல், பயன்பாடு மற்றும் சுத்திகரிப்பு மற்றும் இரசாயண பொருட்களை பாதுகாப்பாக பயன்படுத்துதல், களஞ்சியப்படுத்தி வைத்தல்

ஊ. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். அத்துடன் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர் உரிய சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

08. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.-

i. நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே நியமிக்கப்படுவர்.

ii. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவோர் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

09. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் பொருட்டு உள்ள சகல வினாப்பத்திரங்களிலும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரரது மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசை ஒழுங்கு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கும் வெற்றிட எண்ணிக்கையில் மூன்று மடங்கிற்கு சமனான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர் பரீட்சையின் போது பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். சகல ஆட்சேர்ப்புகளையும் செய்ததன் பின்னர் ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் ஏனைய விண்ணப்பதாரர்களது புள்ளிகளை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டதன் பின்னர் பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரருக்கும் தாம் பரீட்சையின் போது ஒவ்வொரு பாடங்களிலும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகள் என்பன உள்ளடங்கிய பெறுபேற்றினை தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதானது விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமையை கொண்டுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இவ்வறிவித்தலுக்கு அமைய தகைமைகள் பரீட்சிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் கொண்டிராமை தெரியவரின் நியமனம் பெறுவதற்கு தகைமையற்றவர் எனக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. இங்கு குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் நியமன அதிகாரியினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரரும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் நம்பிக்கையில் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரருக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் இடமளிக்கப்படும். பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேற்றினை வெளியிடுவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகளுக்கு அமைய பரீட்சை விண்ணப்பதாரர் உட்படுதல் வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்படுவர்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் யாதேனும் மொழியில் ஏதாவது பொருந்தாத் தன்மை காணப்படுமிடத்து அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானது என கருத்திற் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பேராசிரியர் ஏ. பி. ஹீன்கெந்த
ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகம்.

(அலுவலக பயன்பாட்டிற்காக)

மாதிரி விண்ணப்பப் படிவம்

**ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தில் பண்ணை முகாமையாளர், விரிவாக்கல் உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

Application for the Open Competitive Examination for Recruitment to the post of Farm Manager, Extention Officer, Technological Officer of Class III of the Sri Lanka Technological Service in the Department of Export Agriculture – 2021

01. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் 2
தமிழ் 3 (உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)
ஆங்கிலம். 4

02. விண்ணப்பிக்கும் பதவி/பதவிகள்
விண்ணப்பம் செய்கின்ற பதவி அல்லது பதவிகளின் முன்னுரிமைக்கு அமைய குறிப்பிடப்படல் வேண்டும். ஒரு பதவிக்கு மாத்திரம் விண்ணப்பிப்பதாயின் அப்பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | விருப்பத் தெரிவு முன்னுரிமை | பதவிப் பெயர் | தொடர் இலக்கம் |
|---|---|---|---|
| 01 | 1 ஆவது விருப்பத் தெரிவு | | |
| 02 | 2 ஆவது விருப்பத் தெரிவு | | |
| 03 | 3 ஆவது விருப்பத் தெரிவு | | |

03. பெயர் :
3.1. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ..........................................
(உதாரணம் : HERATH MUDIYANSALAGE SAMAN KUMARA GUNAWARDHANA

3.2. இறுதியாக வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியாகவும் அமையுமாறு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் :- ..........................................
உதாரணம் : GUNAWARDHANA H.M.S.K )

3.3. முழுப்பெயர் : ..........................................
(சிங்களத்தில்/தமிழில்)

04. நிரந்தர முகவரி : ..........................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ..........................................

4.1. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ..........................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

4.2. தொலைபேசி இலக்கம் (இருப்பின்) கையடக்க

நிலையான

4.3. மின்னஞ்சல் முகவரி (E-Mail) : ..........................................

05. தேசிய அடையாள அட்டை இலக்கம்

06. பால் : பெண் 1, ஆண் 0 ☐

(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

07. குடியியல் நிலை ☐
விவாகமானவர் 2, விவாகமாகாதவர் 1 (உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

08. 8.1 பிறந்த திகதி

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8.2 விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுத் திகதி அன்று வயது (...............)

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

09. கல்வித் தகைமைகள்

அ. க.பொ.த.(சா/த)ப் பரீட்சை :
வருடம் மற்றும் மாதம் : ..................................................
சுட்டெண் : ..................................................
மொழி மூலம் : ................................

| | பாடம் | பெற்ற தரம் | | பாடம் | பெற்ற தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

ஆ. க.பொ.த.(உ/த)ப் பரீட்சை :
வருடம் மற்றும் மாதம் : ..................................................
சுட்டெண் : ..................................................
மொழி மூலம் : ................................

| | பாடம் | பெற்ற தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

இ. தொழிற்றகைமைகள் : (டிப்ளோமா தகைமை)

| டிப்ளோமா மற்றும் நிறுவனத்தின் பெயர் | சித்தியடைந்த வருடம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

10.

| | |
|---|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய காசுக்கட்டளை இலக்கம் : | |
| திகதி : | |
| பணம் செலுத்திய தபால்/உப தபால் பணிமனை: | |
| செலுத்திய தொகை : | |

11. **விண்ணப்பதாரரது உறுதியுரை.-**

இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானவையும் சரியானவையும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்வதற்கு முன் அறியவருமிடத்து நான் தகைமையற்றவனாவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியவருமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை அறிவேன்.

மேலும் இந்தப் பரீட்சை நடாத்துவது தொடர்பில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் முன் வைக்கப்படுகின்ற சட்ட ஒழுங்கு விதிகளுக்கும் நான் இணங்குகின்றேன்.

திகதி :................................ ..............................................................

விண்ணப்பத்தாரரது கையொப்பம்.

12. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுபடுத்துதல் .-**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற .............................................என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் ...................... ஆம் திகதி அவரது கையொப்பத்தை வைத்தார் எனவும், உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி காசுக்கட்டளையை சமர்ப்பித்துள்ளார் எனவும் சான்று பகர்கின்றேன்.

திகதி : .............. ..........................................................

கையொப்பத்தை சான்றுபடுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

சான்றுபடுத்தும் உத்தியோகத்தரது முழுப் பெயர் : ..............................................................
பதவி : ..............................................................
முகவரி : ..............................................................
(உத்தியோகபூர்வ இலச்சினையால் உறுதிப்படுத்தவும்)

*13.* **விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரது சான்றிதழ்.-**

மேலே தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி.................................................................................... என்பவர் ............................................................. அமைச்சில்/திணைக்களத்தில்/அலுவலகத்தில் சேவை புரிகின்றார் எனவும், அவரது சேவை திருப்திகரமானது எனவும், உரிய பரீட்சை கட்டனத்தை செலுத்தி உள்ளார் எனவும், இப்பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : .............

.......................................
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது முழுப் பெயர் : ..............................................................
பதவி : ..............................................................
முகவரி : ..............................................................
(உத்தியோகபூர்வ இலச்சினை)

*10- 104*

---

## திருத்தம்

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2021

2021, செத்தெம்பர் 24 ஆந் திகதிய 2247 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021" என்ற பரீட்சை அறிவித்தலில், 6.0 தகைமைகள் பந்தியின் (ஈ) அனுபவம் எனும் பகுதி பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது :

*6.0* **தகைமைகள்.-**

(ஈ) *அனுபவம் :*

(1) இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 3 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தில் அல்லது II ஆந் தரத்துடைய அலுவலராக இருத்தல் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்.

அல்லது

(2) (i) இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆந் தரத்தில் ஐந்து வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்.

மற்றும்

(ii) இவ்வறிவித்தலின் 6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*02.* **விண்ணப்பதாரிகள் பதவிக்குரித்தான அனைத்து தகைமைகளையும் முன்னைய அறிவித்தலின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியான 2021.10.25 ஆந் திகதிக்கு முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும்.**

*03. அவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதோடு இத்திருத்தங்கள் காரணமாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2021.11.01 வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் இத்திருத்தம் காரணமாக மீண்டும் ஒரு முறை விண்ணப்பிக்கத் தேவையில்லை என அறியத்தரப்படுகின்றது.*

எஸ். ஆலோகபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
*அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.*

*அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2021, ஒற்றோபர் 01.*

*10 - 191*

---

**திருத்தம்**

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு*

**நாடளாவிய சேவைகள் மற்றும் அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை - 2021**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2239 ஆம் இலக்கம் மற்றும் 2021.07.30 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையை அடுத்து பிரசுரிக்கப்பட்ட திருத்தத்துடன் கூடிய மேற்குறித்த பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2237 ஆம் இலக்க மற்றும் 2021.07.16 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2021.07.15 ஆந் திகதிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினமானது* **2021, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வரை** *நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய அறியத் தருகின்றேன்.*

*மேலும்,* **2021, யூலை 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர்** *மேற்குறித்த பரீட்சைக்கு நிகழ்நிலை ஊடாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மேற்குறித்த 2021.07.30 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட அறிவித்தலின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவைகளுக்கு/ பதவிகளுக்குக் குறிப்பிட்டுள்ள விருப்பத்தெரிவுகளின் ஒழுங்கினைத் திருத்தஞ் செய்யும் விண்ணப்பப்படிவத்தை மேற்குறித்த விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் என்பதையும் மேலும் அறியத் தருகிறேன்.*

எம்.ஏ.பீ. தயா செனரத்,
செயலாளர்,
*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/9, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஒற்றோபர் 06.*

*10-272*

## திருத்தம்

கல்வி அமைச்சு

### அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் கட்டளைப் பிரகாரம்

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் தரம் III பரீட்சைக்கு ஆட்சேர்ப்பு தொடர்பாக 2021.06.04 ஆந் திகதிய 2,231 ஆம் இலக்க மற்றும் 2021.08.20 ஆந் திகதிய 2,242 ஆம் இலக்க வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட பரீட்சை அறிவித்தல்களில் கீழ்க்காணும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நடாத்தப்பட தீர்மானிக்கப்பட்ட போட்டிப் பரீட்சைகளுக்கு உரிய பொது திருத்தங்கள் கீழ்வருமாறு அமையும் :

- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.10.22 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
- உரிய அனைத்து தகைமைகளும் 2021.07.30 ஆந் திகதி அன்று பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- 2021.09.03 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் அனுப்பிய விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பங்கள் அனுப்பத் தேவையில்லை.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு,

2021, ஒற்றோபர் 05.

10 - 244

---

## திருத்தம்

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை கணக்காளர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2021

2021, யூலை 30 ஆந் திகதிய 2239 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட குறித்த பரீட்சை அறிவித்தல் தொடர்பானதாகும்.

02. அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கையேற்கும் இறுதித் திகதி 2021, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

03. குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதுடன், ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டுமொரு முறை விண்ணப்பிக்கத் தேவையில்லை என அறியத்தரப்படுகின்றது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

2021, ஒற்றோபர் 06.

10 - 274

## திருத்தம்

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை நிர்வாக சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2021

2021.08.06 ஆந் திகதிய 2240 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட குறித்த பரீட்சை அறிவித்தல் தொடர்பானதாகும்.

02. அவ்வறிவித்தலின் பந்தி 08. (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கையேற்கும் இறுதித் திகதி 2021, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

03. குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதுடன், ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டுமொரு முறை விண்ணப்பிக்கத் தேவையில்லை என அறியத்தரப்படுகின்றது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

2021, ஒற்றோபர் 06.

10 - 275

---

## திருத்தம்

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை திட்டமிடல் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2021

2021.08.06 ஆந் திகதிய 2240 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட குறித்த பரீட்சை அறிவித்தல் தொடர்பானதாகும்.

02. அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கையேற்கும் இறுதித் திகதி 2021, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

03. குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதுடன், ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டுமொரு முறை விண்ணப்பிக்கத் தேவையில்லை என அறியத்தரப்படுகின்றது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

2021, ஒற்றோபர் 06.

10 - 276

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.